மறைமலைநகர் நகராட்சியில் 08.03.2019 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சிறப்புக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

| பொருள் எண் | தீர்மான எண் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| 1. | 721 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 2. | 722 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 3. | 723 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 08.03.2019 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சிறப்புக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

## பொருள் எண்.1

இந்நகராட்சியின் இயல்பு நிலை கணக்கு முறையில் வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவற்றை ஒருங்கிணைந்து 2018–19ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2019–20ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண்.67(D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.15.04.2008ன்படி வரவு–செலவு திட்டத்தில் 25% ஏழை எளிய மக்களுக்கு (Basic Amenities for Urban poor) ஒதுக்கீடு செய்தும் வரவு–செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 0001 /2019/சி1)

**நகரமன்ற தீர்மான எண்.721 நாள். 08.03.2019**

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 08.03.2019 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சிறப்புக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.2

மறைமலைநகர் நகராட்சியில் பணிபுரியும் உள் மற்றும் புற பணியாளர்கள் அனைவருக்கும் பிரதி மாத ஊதியம், முன்பணம், பயனப்படிகள், மருத்துவபடிகள், போனஸ், நிலுவைத் தொகை மற்றும் இதர படிகள் 2019–20ஆம் ஆண்டிற்கு பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்.0001/2019/சி1)

**நகரமன்ற தீர்மான எண்.722 நாள். 08.03.2019**

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 08.03.2019 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சிறப்புக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.3

08.03.2019ம் தேதியன்று நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகல்

**1920 வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 306ன்படியும் 2019 ம் வருடத்திய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்விதி 6(4) கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986(சட்ட எண்.29/1986)ல் பிரிவு3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன்படி 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் நெகிழி (Plastic)மொத்த விற்பனை, உற்பத்தி செயல், சேமித்துவைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

1 (i) **செயலாக்க அதிகாரி :** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி :** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர் :** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள் :** இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல் முறை, இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவனை 2–ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spout Fine) வசூலிக்கப்படுவதுடன் தடைசெய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காம் முறையாக மீறுபவர்களுக்கு உடனடியாக தொழில் உரிமம் ரத்து செய்யப்படும்.

2. **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :–**

i மொத்தமாக (Whole sale) சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்

ii வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

iii மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்.

iv சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

3. **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம் :–**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்.

4. அட்டவணை II–ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன் படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **தண்டனைகள் விவரம் :–**

**அட்டவணை–II**

**பிரிவு 306 (28–A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள் :–**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 25,000/– இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ரூ. 50,000/– ஐம்பதாயிரம் ரூபாய் | ரூ. 1,00,000/– ஒரு லட்சம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 10,000/– பத்தாயிரம் ரூபாய் | ரூ. 15,000/– பதினைந்தாயிரம் ரூபாய் | ரூ. 25,000/– இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 1,000/– ஓராயிரம் ரூபாய் | ரூ. 2,000/– இரண்டாயிரம் ரூபாய் | ரூ. 5,000/– ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 100/– ஒரு நூறு ரூபாய் | ரூ. 200/– இருநூறு ரூபாய் | ரூ. 500/– ஐநூறு ரூபாய் |

**ந.க.எண். 2950/2017/எச்1**

அலுவலக குறிப்பு:-மன்றம் அனுமதி வழங்கலாம்

**நகரமன்ற தீர்மான எண்.723 நாள். 08.03.2019**

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி